# பொருளாதாரச் சுரண்டல்

வீங்கிய விரல்களும், வலிக்கும் நுரையீரல்களும், கூனிய முதுகுகளும் கொண்ட சிறுபிள்ளைகளே உலகின் எழில்மிகு கம்பளங்கள் சிலவற்றை உருவாக்குகிறார்கள்.

பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் பல்லாயிரக்கணக்கான சிறுவர், சிறுமிகள் விளையாடவோ, பாடசாலை செல்லவோ, பாலப் பருவத்தை அனுபவிக்கவோ நேரமின்றி வேலைசெய்கிறார்கள். கோடிக்கணக்கான டொலர் பெறுமதி வாய்ந்த ஏற்றுமதித் தொழிலை நிலைபெறச் செய்துவரும் இவர்கள் பெறும் ஊதியமோ அன்றாட சீவனத்துக்குக் கூடப் போதுமானதன்று. பிஞ்சு விரல்கள் துரிதமாக இயங்கும் பருவமாகிய ஆறு, ஏழு வயதிலேயே இவர்கள் கம்பளங்களுக்கு முடிச்சுப் போடப் பயில்கிறார்கள். ஆனால் நெசவித்தறிச் சொந்தக்காரர்கள் இவர்களை விரும்பக் காரணம் அவர்களின் கீழ்ப்படிவும் அற்ப சம்பளத்துக்கு மிக மோசமான நிலைமைகளில் வேலை செய்ய இவர்கள் உடன்படுவதுமேயாகும்.

கம்பள நெசவு சிரமமிக்க, ஆரோக்கியத்தைக் கெடுக்கின்ற தொழிலாகும். சிறுவர்கள், சிறுமியர் குந்தியிருந்து, கம்பளித் தூசைச் சுவாசித்துக் கண் துஞ்ச, விரல் நோக, மணிக் கணக்கில் வேலை செய்வார்கள். முடிச்சுகளைப் போடுவதற்கு அவர்கள் உபயோகிக்கும் அரிவாள் போன்ற கருவி, விரல்களில் கொப்புளங்களைத் தோற்றுவிக்கும். கம்பளத்தின் ரசாயனச் சாயங்களில் இவ்விரல்கள் தோயும் போது வலி மேலும் மோசமாகும். அவர்கள் வளரும் போது, சில சமயங்களில் முதுகில் கூனல் உண்டாவதுண்டு. வயதடையும் பருவத்தில் பெரும்பாலானவர்கள் நோயாளிகளாக வேலையிலிருந்து விலகி விடுகிறார்கள். அநேக சந்தர்ப்பங்களில் இவர்கள் குடும்பத்தைக் காப்பாற்றும் பொருட்டு, தமது சொந்தப் பிள்ளைகளையே தமது முன்னைய வேலைத் தலங்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள். இவ்வாறாக, சுரண்டல் சகடக்கால் போலச் சுழன்று கொண்டே போகிறது.

சிறுவரைச் சுரண்டி வாழும் வழக்கம் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்துக்கு மட்டும் உரியதொன்றல்ல. வளர்முக நாடுகளில் மட்டுமல்லாமல் அநேக தொழில்மய நாடுகளிலும் பல லட்சக்கணக்கான சிறுவர்கள் சிறுபிராயத்திலிருந்தே வேலைசெய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். பலருக்கு வேலை வேதனையின் உறைவிடம். அதற்கு ஏதுவாகவுள்ள நிலைமைகள், குறிப்பாக வறுமை இரவோடிரவாக மறையக் கூடிய தொன்றல்ல. சிறுவர்களின் உழைப்பு பெரும்பாலும் குடும்பத்தின் சீவனத்துக்கு இன்றியமையாததாகிறது. ஆயினும், அரசாங்கங்கள் மனம் வைத்தால் சுரண்டலையும் மனித உரிமைகளை மறுக்கும் ஏனைய துர்நடத்தைகளையும் ஒழித்துவிட முடியும்.

உதாரணமாக ஐரோப்பா, இந்தியா, வட அமெரிக்கா ஆகிய பகுதிகளில் சிறுவர் உரிமைக்காகப் போராடுவோர், சிறுவர் உழைப்பைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கம்பளங்களுக்கு எதிராக நடத்திய இயக்கம், கம்பள உற்பத்தித் துறையில் சிறுவர் உழைப்பைச் சுரண்டும் நடவடிக்கையை ஒழிப்பதற்கு ஏதுவாயிற்று. அரசாங்கத்தின் கம்பள ஏற்றுமதி மேம்பாட்டுச் சபையும், அகில இந்திய கம்பள உற்பத்தியாளர் சங்கமும் உரிய தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கும் முன்வந்தன. ஏற்றுமதியாளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கப்படும் என்றும், அரசாங்கத்தின் மானியத்தை இழக்க நேரும் என்றும் அச்சம் கொண்ட 30 உற்பத்தியாளர்ள் தமது கம்பளத் தறிகளைப் பதிவு செய்து கொள்வதற்கு முன் வந்தனர். சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்களா எனக் கிரமமாகப் பரிசோதனை செய்வதற்கு இது வழிவகுத்தது.

இத்தகைய சிறு வெற்றிகள் உலகமெங்கும் கிடைத்தல் அவசியம். ஏனென்றால், மிக வறிய சமூகங்களில் சிறுவர்கள் தனித்தோ தமது பெற்றோர் அல்லது உறவினர்களுடன் சேர்ந்தோ, வேலைசெய்வதைக் காணக்கூடியதாக உள்ளது. பானங்கள், சிற்றுண்டிகள்,

பத்திரிகைகள் மற்றும் பண்டங்களை அவர்கள் கொண்டு திரிந்து விற்கிறார்கள். பிரேஸில் நாட்டில் சிறுவர்கள் வாழைத்தோட்டங்களில் வேலை செய்கிறார்கள். கொலம்பியாவில் செங்கற்களைச் சுமக்கிறார்கள், மொரக்கோவில் ஓடுகளுக்கு களி உடைக்கிறார்கள், எகிப்தில் கந்தைத் துணிகள் மற்றும் கழிவுகளைச் சேகரிக்கிறார்கள், சூடானில் பஞ்சு அறுவடை செய்கிறார்கள். இலங்கையில் வீட்டுப் பணியாளர்களாக வேலை செய்கிறார்கள்.

பெரும்பாலான துஷ்பிரயோகங்கள், விவசாயத்துறை, நகர்ப்புறப் பொருளாதாரத் துறை, மற்றும் வீட்டுப்பணி, ஆகியவற்றில் இடம் பெறுகின்றன. வீடுகளில் வேலைசெய்யும் இளம் பெண்கள் பெரும் உபத்திரவங்களுக்கும் சுரண்டல்களுக்கும் உள்ளாகிறார்கள். இந்த விபரீதங்களுக்கு உந்து சக்தியாக அமைவன வறுமை, சனப்பெருக்கம், தொழில்மயமாக்குதல் மற்றும் நகர்ப்புறங்களின் துரித வளர்ச்சி என்பனவாகும்.

நகர்ப்புறங்களில் வேலை செய்வதிலும், விவசாயத் துறையில் குடுபத்தின் ஏனைய அங்கத்தினரின் கண்காணிப்பில் கூலி வேலை செய்வது பாதகம் குறைந்ததாகத் தோன்றலாம். ஆனால், விவசாயத்தை இயந்திரமயமாக்கியமையும், அதேபோன்று பண்ணைகளைப் பெருந்தோட்டங்களாக மாற்றியமையும், உச்ச தொழில்நுட்ப உள்ளீடுகளைப் புகுத்தியமையும், ஏழைக் கிராம மக்களுக்கும் அவர்கள் உழுதுண்டு வாழும் காணிகளுக்கும் இருந்த பற்றுதலை முற்றாக மாற்றியுள்ளன. அதிகமதிகமான குடும்பங்கள் காணி நிலமற்றோராகின்றன; அல்லது சீவனத்துக்கு வகைசெய்ய முடியாத அளவுக்கு அவர்களின் காணிகள் குறுகிவருகின்றன. பிறரின் காணிகளில் கூலிகளாக வேலை செய்வதால் நகர்சார்ந்த கூலியாட்களுக்குக் கிடைக்கும் சட்டப் பாதுகாப்பு அவர்களுக்குக் கிடைப்பதில்லை. பிள்ளைகளையும் கூட்டி வந்து வேலைசெய்ய வேண்டுமென்ற நிபந்தனையில், பெரியவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவது சாதாரண வழக்கமாக உள்ளது. நவீனமயமாக்கப்பட்ட வேளாண்மை, ஆபத்தான இயந்திரங்களினால் ஏற்படக்கூடிய விபத்துக்களுக்கும், துன்பந்தரும் கிருமிநாசினிகள், களை நாசினிகளுக்கும் சிறுவர்களை முகம் கொடுக்க வைக்கிறது. இவையும் ஏனைய காரணங்களும், நகர் சார்ந்த பகுதிகளைப் பார்க்கிலும் கிராமப் பகுதிகளில் சிறுவர் மரணம், நோய், போசாக்கின்மை, ஊனம், எழுத்தறிவின்மை என்பன அதிகரிப்பதற்குப் பெருமளவு ஏதுவாகின்றன. நகர்ப்புறங்களில் சுரண்டலுக்கு ஆளாகியுள்ள பாலியத் தொழிலாளிகள் பலர் நகரங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அல்லது கிராமத்தின் கொடிய நிலைமைகளைத் தாங்க முடியாமல் அங்கு ஓடிவந்த கிராமச் சிறுவர்களே என்று சர்வதேச தொழில் நிறுவன அறிக்கைகள் கூறுகின்றன.

வளர்முக உலகில் முறைசாராத் தொழில் முயற்சிகள் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆனால், இம்முயற்சிகள் பதிவு செய்யப்படுவதில்லை. எனவே, முறைசார் தொழில் முயற்சிகளைக் கட்டுப்படுத்தும் சட்டதிட்டங்கள் இவற்றைப் பாதிப்பதில்லை. சிறுவர் உழைப்பைச் சுரண்டித் துரிதமாக வளர்ந்துவரும் முறைசாராத் தொழில் துறையானது, கம்பளம் புனைதல், செங்கல் தயாரித்தல், அகழ்தல், கல் உடைத்தல், கைப்பணிகள், விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்தல், சப்பாத்து மினுக்குதல் தொடக்கம் பாடசாலைகளில் சிறுவர் பயன்படுத்தும் பென்சில் தயாரித்தல் ஈறாக சகல முயற்சிகளையும் உள்ளடக்குகிறது.

வீட்டுப் பணியாளர்களாக வேலைசெய்யும் சிறுவர், சிறுமியர்களே மிக மோசமாக சுரண்டப்படுவோராவார். இவர்களைப் பாதுகாப்பதும் மிகக் கடினம். பெரும்பான்மையானவர்கள் சிறுமிகள். எசமானர்களுடன் சீவிக்கும் இவர்கள் அவர்களிலேயே முற்று முழுதாகத் தங்கியிருக்கிறார்கள். சிலர் பெற்றோரால் அடிமைகளைப் போல விற்கப்படுகிறார்கள். ஆகவே, இவர்கள் தனித்துப் போகிறார்கள். அவர்களின் வயது, பால், மற்றும் சிறை போன்ற தனிவாழ்க்கை, வெளியுலகிலிருந்து மறைத்து வைத்திருத்தல் ஆகிய காரணங்களால் அவர்கள் சுரண்டப்படும் ஆபத்து அதிகம்.

சுரண்டல்களைத் தேடிக் கண்டுபிடித்து, பொது மக்களுக்குப் பிரசாரம் செய்ய வேண்டியது வெகுசன ஊடகங்களின் பொறுப்பாகுமெனவும், இது விடயத்தில் பொதுமக்களின் கண்காணிப்பு முக்கியமெனவும் சர்வதேச தொழில் நிறுவனம் வலியுறுத்துகிறது. தேசிய அல்லது சர்வதேச பத்திரிகை நிறுவனங்கள், சிறுவர்கள் சுரண்டப்படுவது தொடர்பான விடயங்களைப் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவந்த பின்னரே, அத்தகைய ஊழல்களைக் கட்டுப்படுத்துவதில் பெரும்பாலான நாடுகள் வெற்றிகண்டனவென்று மேற்படி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

“சிறுவர்களின் உழைப்பை ஏற்றுக் கொள்வதென்பது தர்ம நியாயத்துக்கு ஏற்றதோ, நல்ல சமூகக் கோட்பாடோ அல்ல. அது தர்மத்துக்கு விரோதமானது; ஏனென்றால் அது தவிர்க்கக்கூடிய ஒரு பெருந் தீமையை வரவேற்கிறதாகிறது. அது நல்ல சமூகக் கொள்கையன்று; ஏனென்றால், மனித இனத்தின் அடிப்படையான நோக்கத்தை அதாவது சிறியோரைப் பேணி வளர்க்கும் பணியை அது புறக்கணிக்கிறதாகிறது. அது மட்டுமன்றிப் பிஞ்சிலேயே கனியச் செய்வதன் மூலம் எதிர்கால மனித வளத்தின் சிறப்பை நாசம் செய்வதாகிறது” என்று சர்வதேச தொழில் நிறுவனம் குறிப்பிடுகிறது.

உலகெங்கும் பொருளாதார ரீதியாகச் சிறுவர், சிறுமியர் சுரண்டப்படுவதை எதிர்ப்பதில் யுனிசெப் எப்போதும் முன்னணியில் நின்று வந்துள்ளது. சர்வதேச தொழில் நிறுவனத்தின் சிறுவர் உழைப்பை ஒழிப்பதற்கான சர்வதேச செயற்திட்டத்துடன் யுனிசெப் நெருங்கிப் பணியாற்றுகிறது. அதன் பணிகளில் ஆபத்தான வேலைச் சூழல்களை இனங்காண்பதும் சிறுவர்களை அத்தகைய நிலைமைகளிலிருந்து காப்பதும் அடங்கும்.

தொழில் செய்யும் சிறுவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான தேசிய சட்டதிட்டங்கள் ஏட்டில் இருக்கின்ற போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சீர்கேடு காணப்படுகிறது. மேலும், சட்டத்தில் காணப்படும் சில ஓட்டைகளை அல்லது குறைபாடுகளை தொழில் கொள்வோர் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார்கள்.

தொழில் கொள்வதற்கான குறைந்த பட்ச வயதெல்லையை நிர்ணயித்தல், வேலை நிலைமைகளை நெறிப்படுத்துதல், ஆரோக்கியத்துக்குப் பாதகம் விளைவிக்கக்கூடிய எந்தத் தொழிலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாத்தல், ஆரம்பக் கல்வியை எல்லோர்க்கும் கட்டாயமாக்குதல், ஆதியன தேசங்களின் பொறுப்பாகுமென்பதைச் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் வலியுறுத்திக் கூறுகிறது. சமவாயத்தை அங்கீகரிக்கும் நாடுகள், ஆரோக்கியமான பாலப்பருவத்துக்கு அடிப்படையாகவுள்ள ஓய்வு, பொழுதுபோக்கு, கலாசார நடவடிக்கைகள் என்பன தொடர்பாக சிறுவர்களுக்குள்ள உரிமைகளை மதித்தல் வேண்டுமெனவும் அது வரையறுத்துள்ளது.